கிராமபுற பொருளாதார முன்னேற்றத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பின் பங்கு

பெ. வசந்தகுமார், பேராசிரியர் மற்றும் தலைவர்
கால்நடை மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்
பண்டுதகாரன் புதூர், மண்மங்கலம் (அஞ்சல்) கரூர் - 639 006

உலக அளவில் முட்டை உற்பத்தியில் மூன்றாம் இடத்திலும் கோழி இறைச்சி உற்பத்தியில் ஐந்தாவது இடத்திலும் இந்தியா உள்ளது. 60 மில்லியன் முட்டைகளும் 2.2 மில்லியன் டன் கோழி இறைச்சியும் நம் நாட்டில் உற்பத்தியாகிறது. தனி மனிதனுக்கு ஒரு ஆண்டுக்கு கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 214 ஆக உயர்ந்துள்ளது. இந்தியாவிலேயே தமிழகம் கோழி உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது, நம் நாட்டில் உற்பத்தியாகும் மொத்த கோழிகளில் 5 ல் 1 பங்கு தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

நாட்டுக்கோழி வளர்ப்பு – அனுகூலங்கள்

நாட்டுக் கோழி வளர்ப்பு மூலம் குடும்ப வருமானம் கூடுகிறது, அவசர பணத் தேவையை பூர்த்தி செய்ய முடியும். பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. தரமான புரதம் மற்றும் தாது உப்புகள் நிறைந்த முட்டை மற்றும் இறைச்சி கிடைக்கிறது. மேலும் நாட்டு கோழிகள் மூலம் தரமான எரு கிடைக்கிறது. வயலில் களை செடிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. நாட்டு கோழிகள் பண்ணை கோழிகளை விட நோய் எதிர்ப்பு சக்தி அதிகம். ஆரம்ப கட்ட முதலீடு மற்றும் உற்பத்தி செலவு குறைவு. சுய வேலை வாய்ப்புகளுக்கு ஏற்ற தொழில் நாட்டுக் கோழி விற்பனை வாய்ப்புகள் அதிகம்.

நாட்டு கோழி இனங்கள் :-

நம் நாட்டில் 20 க்கும் மேற்பட்ட நாட்டு கோழி இனங்கள் உள்ளன.

அல்லேஸ்வர் - குஜராத்

அசீல் - ஆந்திரா, ஒரிசா மற்றம் சட்டீஸ்கர்

பஸ்ரா - மகராஷ்டிரா, குஜராத்

டன்கி - ஆந்திரா

காகஸ் - கர்நாடகா மற்றும் ஆந்திரா

கலஸ்தி - ஆந்திரா

கடக்நாத் - மத்திய பிரதேசம்

டெல்லி சேரி - கேரளா மற்றும் பாண்டிச்சேரி

பஞ்சாப் பழுப்பு - பஞ்சாப் மற்றும் ஹரியானா

தமிழ்நாட்டில் அசில் வகை மற்றும் கலப்பின கோழிகள் அதிகம் வளர்க்கப்படுகின்றன.

அசில் வகை கோழிகள்

அசில் வகை கோழிகள் இறைச்சிக்காவும் சண்ட கோழியாகவும் வளர்க்கப்படுகிறது, தோலின் நிறம் வெண்மை. முட்டை உற்பத்தி வருடத்திற்கு 65 மூன்று மாத உடல் எடை – 1.0 கிலோ.

கடக்நாத் / கருங்கால் கோழி

இறைச்சி மற்றும் இரத்தம் கருப்பாக இருக்கும் ஆண்டுக்கு முட்டை உற்பத்தி சுமார் 80

மற்ற இனங்கள்:-

பெரும்பாலும் நாட்டு இன கோழிகள் வருடத்திற்கு 40 முதல் 80 முட்டைகள் வரை இடும். முட்டை பழுப்பு அதாவது பிரவன் (brown) நிறததில் இருக்கும். நாட்டு கோழிகளில் முட்டை உற்பத்தி குறைவு என்பதால் கலப்பின கோழிகள் தற்போது உற்பத்தி செய்யப்படுகிறது

கலப்பின / தரம் உயர்த்தப்பட்ட கோழி இனங்கள்' -

கலப்பின கோழிகள் இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியை அதிகரிக்க வெளிநாட்டு இனங்களுடன் கலப்பினம் செய்யப்படுகிறது.

வனராஜா:-

முட்டை மற்றும் இறைச்சி உற்பத்திற்கு ஏற்றது. 10 வாரத்தில் சேவல் எடை 1.5 கிலோ வரை இருக்கும். கோழிகள் வருடத்திற்கு 140 முட்டைகள் வரை இடும். 6 வார வயதில் எடை 750 கிராம்.

கிராம பிரியா :-

முட்டை உற்பத்தியை அதிகரிக்க உருவாக்கப்பட்ட இனம். புறக்கடை வளர்ப்பு முறையில் ஆண்டுக்கு 160 – 180 முட்டைகள் இடும் திறன் கொண்டவை. 15 வார வயதில் சேவல் எடை 1.5 கிலோ வரை இருக்கும்.

சிரி நிதி :-

முட்டை மற்றும் இறைச்சிக்காக உருவாக்கப்பட்ட இனம் புறக்கடை வளர்ப்பு முறையில் வருடத்திற்கு 150 முட்டைகள் வரை இடும். முட்டை எடை 50 கிராம் இருக்கும்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் உருவாக்கப்பட்ட நாட்டுக் கோழி இனங்கள்

நந்தனம் கோழி – IV

இறைச்சி மற்றும் முட்டைக்காக உருவாக்கப்பட்டது. வருடத்திற்கு முட்டை உற்பத்தி 225 ஆகும். 20 வாரத்தில் உடல் எடை 1.3 கிலோ சராசரி முட்டை எடை 52 கிராம்.

நாமக்கல் கோழி – I

இறைச்சி மற்றும் முட்டை உற்பத்திக்கு உகந்தது. வருடத்திற்கு முட்டை உற்பத்தி 160 ஆகும். பொதுவாக கலப்பின கோழிகளில் அடை காக்கும் தன்மை கிடையாது. ஆகவே நாட்டு கோழிகளை பயன்படுத்தி முட்டைகளை அடை வைத்து குஞ்சு பொரிக்கலாம்.

நாட்டு கோழி வளர்ப்பு திட்டங்கள்

மத்திய, மாநில அரசுகள் நாட்டுக்கோழி வளர்ப்பை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

மத்திய அரசின் தேசிய கால்நடை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நபார்டு வங்கி மூலம் நாட்டு கோழி பண்ணை, தீவன ஆலை குஞ்சு பொரிப்பான் மற்றும் வாகனங்கள் வாங்க 25% மானியம் வழங்கப்படுகிறது. அதே போல் கோழி பண்ணைகள் குறைவாக உள்ள மாவட்டங்களில் 250 நாட்டு கோழிகள் வளர்ப்பதற்கு 25% மானியம் தமிழக அரசின் சிறப்பு கோழி வளர்ப்பு திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இது தவிர, வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டு கிராமபுற பெண்களுக்கு 20 கோழிகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

நாட்டுக்கோழி வளர்ப்பு – பொருளாதாரம்

குஞ்சு விலை - ரூ.40/-
தீவன செலவு - ரூ.80/-
மருந்து / மின்சாரம் / பராமரிப்பு / - ரூ.30/-

உற்பத்தி செலவு - ரூ.150/-
---

14 வார வயதில் உடல் எடை 1.0 – 1.2 கிலோ
விற்பனை விலை - ரூ.300/-
நிகர இலாபம் - ரூ.150/- ஒரு கோழிக்கு

100 கோழிகள் வீதம் வருடத்திற்கு மூன்று முறை 300 கோழிகள் வளர்க்கலாம். இதன் மூலம் வருடத்திற்கு ரூ.45,000/- கிடைக்கும். துவிர, சத்தான கோழி எச்சம் வயலுக்கு உரமாக கிடைக்கிறது, கோழி எச்சத்தில் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மட்டும் அல்லாமல் இரும்பு, துத்தநாகம், தாமிரம், மங்கனீசு போன்ற நுண்ணூட்ட தாதுக்கள் நிறைந்துள்ளது.

நாட்டு கோழி இறைச்சி மற்றும் முட்டை விற்பனை வாய்ப்புகள்

பண்ணை முறையில் வளர்க்கப்படும் கறி கோழி இறைச்சியை விட நாட்டுக்கோழி இறைச்சி பொது மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுகிறது. கோழி இறைச்சியில் 2% புரதம் மற்றும் தாது உப்புகள் நிறைந்துள்ளது. அதே போல் நாட்டு கோழி முட்டைக்கு கிராக்கி உள்ளது. பண்ணை கோழி முட்டை ரூ. 3.50 முதல் 4.0 வரை விற்கப்படும் போது நாட்டுக் கோழி முட்டை ரூ.8 முதல் ரூ.12 வரை விற்கப்படுகிறது.

சத்துக்கள் செறிவூட்டப்பட்ட முட்டைகள் மற்றும் இறைச்சி உற்பத்தி செய்து மனிதர்களின் உடல் ஆரோக்கியம் மேம்பட விற்பனை செய்யலாம். கம்பு, மீன்கள், ஆளி விதை, மீன் எண்ணெய் ஆகியவற்றை தீவனமாக கொடுத்து மனித இதயத்திற்கு நன்மை பயக்கும். ஓமேகா - 3 செறிந்த முட்டைகளை உற்பத்தி செய்யலாம். அதே போல் வைட்டமின்கள் / தாது

உப்புகள் செறிவூட்டம் செய்யப்பட்ட முட்டைகளை உற்பத்தி செய்து அதிக இலாபம் பெற முடியும். நோய் எதிர்ப்பு சக்தி, கண் பார்வை குறைபாட்டை தவிர்க்க லூடின், கரோட்டீன் நிறமிகள் செறிவூட்டப்பட்ட இறைச்சி மற்றும் முட்டைகள் உற்பத்தி செய்து வணிக ரீதியீல் விற்பனை செய்யலாம்.

கோழி எச்சத்திலிருந்து எரிவாயு உற்பத்தி

இந்தியாவில் சுமார் 30 மில்லியன் டன் கோழி எச்சம் கிடைப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. கோழி எச்சத்திலிருந்து நொதித்தல் முறையில் மீத்தேன் வாயு உற்பத்தி செய்யப்பட்டு எரிவாயுவாக பயன்படுகிறது, சுமார் 15 கிலோ கோழி எச்சத்திலிருந்து ஒரு குடும்பத்திற்கு தேயான எரிவாயு தினமும் உற்பத்தி செய்யலாம்.

கூட்டு பண்ணையம் முறை

நாட்டுக்கோழி உற்பத்தியாளர் குழுக்கள் / சங்கங்கள் ஏற்படுத்தி கூட்டு பண்ணையம் முறையில் முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தி செய்தால் உற்பத்தி செலவை குறைத்து நிகர இலாபத்தை அதிகரிக்கமுடியும். விற்பனையில் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்க்க முடியும்.